# மேட்ரிக்ஸ் திகைப்பூட்டும் தீபாவளி கொண்டாட்டம்



★ தலைமை அதிகாரி லிம் கோக் யீ



★ வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நுழைவாயில்

(துர்க்கா)

சிரம்பான், அக். 29- மேட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவனம் முதல் முறையாக திகைப்பூட்டும் தீபாவளி 2022 ஐக் கொண்டாடியது. பலதரப் பட்ட வண்ண விளக்குகளுடன் அலங்கரிக்கப்பட்டு, ஒளிரும் தீபத் திருவிழாவாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிரம்பான், பண்டார் ஸ்ரீ செண்டாயான் பாயு சுத்ராகேலரியா குடியிருப்பு நுழைவாசலில் இன்று அக்டோபர் 29 சனிக்கிழமை முதல் 30 ஆம் தேதி ஞாயிற் றுக்கிழமை வரை இருதினங் கள் மாலை 6.00 முதல் இரவு 10.00 மணி வரை பல்வேறு சமூகங்களுக்கு இடையே தீபாவளியின் உணர்வை மெரு கூட்டும் வகையில் இந் நிகழ்ச்சி நடைபெறும் என்று அதன் தலைமை அதிகாரி லிம் கோக் யீ கூறினார். இந்நிகழ்ச்சி யில் இந்திய பாலிவுட் நடனம், மருதாணியிடும் கலை, பட்டாசு வெடித் தல், நெருப்பு ஊதும் கலை விளையாட்டு, பட்டறைகள், பல கவர்ச்சிகரமாக போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பங்கெடுத்து ஆதரவு வழங்க அனைவரும் திரண்டு வருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.